ஈழமண்ணில் சூறாவளி காத்தடிக்குது
இரவும் பகலும் சிங்களப்படை கூத்தடிக்குது
தமிழ் பொண்ணு பள்ளிக்கூடம் போகமுடியல்ல
தமிழர் வாழ்கை ஏனோ ஏனோ இன்னும் விடியல்ல 2

ஈழமண்ணில் சூறாவளி காத்தடிக்குது
இரவும் பகலும் சிங்களப்படை கூத்தடிக்குது

கால நேரம் பாக்காம கதவு தட்டுறான்
கணவன் எதிரில் மனைவி உடம்பை பிளந்து கட்டுறான் 2
ஈழமக்கள் மான வாழ்வில் மண்ணை கொட்டுறான்
எங்கள் தமிழ் இனத்தின் ஆணி வேரை வெட்டுறான் 2

ஈழமண்ணில் சூறாவளி காத்தடிக்குது
இரவும் பகலும் சிங்களப்படை கூத்தடிக்குது

வெள்ளை வண்டி இரவு பகல் வட்டம் அடிக்குது
புள்ள குட்டி பெத்த மனசு புழுவாய் துடிக்குது 2
கொள்ளை கொலை வீடு வீடாய் நாளும் நடக்குது
குடும்ப வாழ்வு உருக்குலைஞ்சு பாளாக்கிடக்குது 2

ஈழமண்ணில் சூறாவளி காத்தடிக்குது
இரவும் பகலும் சிங்களப்படை கூத்தடிக்குது

அப்பா தேடி வச்ச நிலத்தை அடிச்சு பறிக்கிறான்
ஐயோ என்றால் எலும்பை கூட ஒடச்சு முறிக்கிறான் 2
தப்பா நாங்கள் வாழ்ந்ததில்லை சிறையில் தள்ளுறான்
தமிழர்களை தேடித்தேடி தினமும் கொல்லுறான் 2

ஈழமண்ணில் சூறாவளி காத்தடிக்குது
இரவும் பகலும் சிங்களப்படை கூத்தடிக்குது
தமிழ் பொண்ணு பள்ளிக்கூடம் போகமுடியல்ல
தமிழர் வாழ்கை ஏனோ ஏனோ இன்னும் விடியல்ல 2

ஈழமண்ணில் சூறாவளி காத்தடிக்குது
இரவும் பகலும் சிங்களப்படை கூத்தடிக்குது